**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW4/LW7 |
| Name | : | திரு. கார்த்திகேயன் |
| Father's/Husband Name | : | திரு. கலியமூர்த்தி |
| Village | : | பட்டுக்கோட்டை |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of March 2022

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு. முரளிதரன், bench clerk Gr-3(i/c) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். பந்தல் கான்ட்ராக் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகள் ரமேஷ், செந்தமிழ், சத்தியா மற்றும் இறந்துபோன எதிரி சிரஞ்சிவி ஆகியோரை தெரியும். எனது தெருவை சேர்ந்தவர்கள். அசா1,2 ஐ எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவும் இல்லை கேள்விப்படவும் இல்லை. அசா1 எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 12.01.2012 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நான் என் சொந்த வேலையாக

மதுக்கூர் சென்று விட்டு நான் எனது மோட்டார் சைக்கிளில் வந்துக்ொகண்டிருந்தபோது வளவன்புரம் மதுக்கூர் ரோட்டில் உள்ள முகைதீன் அப்துல் காதர் வீட்டிற்கு முன்பு கண்டியன் தெருவை சேர்ந்த எதிரிகள் ரமேஷ், சிரஞ்சிவி, செந்தமிழ், சத்தியா ஆகியோர் கையில் அருவாள் கட்டையுடன் நின்றுக்கொண்டு சிவக்கொல்லையை சேர்ந்த அசா1 அமானுலா வை முகைதீன் அப்துல் காதர் ஆகியோரை அடித்தார்கள் என்றும், அவர்கள் அடித்ததில் அமானுலாவுக்கும், முகைதீன் அப்துல் காதருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், கொஞ்ச நேரத்தில் அதிராம்பட்டிணத்தை சேர்ந்த இரண்டு நபர்கள் வந்து காயம் பட்ட இருவரையும் மருததுவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், இந்த சம்பவம் சம்பந்தமாக போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW5/LW8 |
| Name | : | திரு. ராஜா |
| Father's/Husband Name | : | திரு. முத்துவேல் |
| Village | : | பட்டுக்கோட்டை |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of March 2022

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு. முரளிதரன், bench clerk Gr-3(i/c) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை மற்றும் இறந்துபோன சிரஞ்சிவியை தெரியும் கண்டியன் தெருவை சேர்ந்தவர்கள், எனது நண்பர்கள். அசா1,2 ஐ தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது அது **அசாஆ 2** ஆகும். மேற்படி கையெழுத்தை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு என் சொந்த வேலையாக பட்டுக்கோட்டை காவல்நிலையம் சென்ற போது போலிசார் எழுதாத வெள்ளை தாளில் வாங்கினார்கள். அசா1 எதிரிகள் மீது கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 13.01.2012 ந் தேதி மதியம் 12.30 மணிக்கு நானும் கோட்டைகுளம் பிரதாப் என்பவரும் மதுக்கூர் ரோட்டில் உள்ள பை ஸ்டார் மெட்ரிக் மேல்பள்ளி அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது பட்டுக்கோட்டை போலிசார் 12.01.2012 ந் தேதி இரவு கண்டியன் தெருவை சேர்ந்த எதிரிகள் முகைதீன் அப்துல் காதர் வீட்டு முன்பு தகராறு செய்த இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் எங்களை சாட்சியாக கையெழுத்து போட சென்னார்கள் என்றும், அதில் நானும், கோட்டைகுளம் செல்வம் மகன் பிரதாப்பும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் நண்பர்கள் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

Adobe

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No | : | CC.279/17 |
| Deposition of witness | : | PW6/LW9 |
| Name | : | திரு. பிரதாப் |
| Father's/Husband Name | : | திரு. செல்வம் |
| Village | : | பட்டுக்கோ்டை |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of March 2022

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு. முரளிதரன், bench clerk Gr-3(i/c) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். கோட்டைக்குளத்தில் மரப்பட்டைரை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை மற்றும் இறந்துபோன சிரஞ்சிவியை தெரியும் கண்டியன் தெருவை சேர்ந்தவர்கள், எனது நண்பர்கள். அசா1,2 ஐ தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அது **அசாஆ** 3 ஆகும். மேற்படி கையெழுத்தை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு என் சொந்த வேலையாக பட்டுக்கோட்டை காவல்நிலையம் சென்ற போது போலிசார் எழுதாத வெள்ளை தாளில் வாங்கினார்கள். அசா1 எதிரிகள் மீது கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியாது. என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் 13.01.2012 ந் தேதி மதியம் 12.30 மணிக்கு நானும் பாளையம் முத்துவேல் மகன் ராஜா என்பவரும் மதுக்கூர் ரோட்டில் உள்ள பை ஸ்டார் மெட்ரிக் மேல்பள்ளி அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றம், அப்போது பட்டுக்கோட்டை போலிசார் 12.01.2012 ந் தேதி இரவு கண்டியன் தெருவை சேர்ந்த எதிரிகள் முகைதீன் அப்துல் காதர் வீட்டு முன்பு தகராறு செய்த இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றம், அந்த பார்வை மகசரில் எங்களை சாட்சியாக கையெழுத்து போட சென்னார்கள் என்றும், அதில் நானும், பாளையம் முத்துவேல் மகன் ராஜா சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் நண்பர்கள் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

AdvoCv